# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029160

1. District மாவட்டம் : கிருஷ்ணகிரி PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 4/AC/18 Date: நாள் 05.06.18

2. (i) Act சட்டம்: u/s 7 of PC Act 1988 Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 01.06.2018/13.00 மணி
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 04.06.2018/12.30 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.06.18 Time : நேரம் 15.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.06.18 Time : நேரம் 15.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி அச்சுப்பிரதி

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் வட்டாட்சியர் அலுவலகம், ஊத்தங்கரை சுமார் 50 கி.மீ தெ.கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி ஊத்தங்கரை கிருஷ்ணகிரி மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N. சேகர் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் நல்லமாறன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45 yrs. (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி சந்திரப்பட்டி கிராமம் M. வெள்ளாளப்பட்டி அஞ்சல் ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. சிவராஜ் துணை வட்டாட்சியர், ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலகம் கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP 240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………….. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

B. Gomi

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
05/06/18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
05-06-2018 / 21.00 மணி

Name: பெயர் S. முகேசன்
Rank: நிலை சிறப்பு உதவி ஆய்வாளர் No. எண் ……

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 4/AC/2018 சட்டப்பிரிவு 7 of PC Act 1988 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

---

05.06.2018ம் தேதி மதியம் சுமார் 15.00 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலில் இருந்தபோது, கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம் சந்திரப்பட்டியை சேர்ந்த நல்லமாரன் என்பவரின் மகன் சேகர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி அச்சுப்பிரதி மூலப்புகாரின் விவரம்: அனுப்புநர் என்.சேகர் த/பெ நல்லமாரன், சந்திரப்பட்டி கிராமம், எம்.வெள்ளாளப்பட்டி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கிருஷ்ணகிரி மாவட்டம் ஐயா, நான் சந்திரப்பட்டியில் என் அம்மா அமராவதி மற்றும் எனது குடும்பத்துடன் குடியிருக்கிறேன். எனது அப்பா நல்லமாரன் 1988 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். பரட்டூர் பள்ளத்தில் எங்களுக்கு பொதுவாக 2 ஏக்கர் விவசாய நிலம் எனது அப்பா பெயரில் உள்ளது. அதில் ஒரு மாதத்திற்கு முன்பு போர்போட்டுள்ளேன். அந்த போருக்கு EB சர்வீஸ் வாங்குவதற்காக, என்னுடைய அம்மா அமராவதிக்கு விதவைக்கான சான்றும், எங்களுக்கு வாரிசு சான்றும் கேட்டு 01.06.2018 ஆம் தேதி மதியம் சுமார் 1.00 மணிக்கு நான் என்னுடைய அண்ணன் முறையான குள்ளமாரன் மகன் குமரேசனுடன் ஊத்தங்கரை தாலுக்கா ஆபிஸ் சென்று இரண்டு விண்ணப்பங்கள் கொடுத்தேன். அப்போது அங்கிருந்த துணை வட்டாட்சியர் சாம்ராஜ் அவர்கள் விண்ணப்பத்தை வாங்கிகொண்டு, என்னுடைய அம்மா அமராவதி பெயரில் விதவை சான்று மற்றும் எங்களுக்கு வாரிசு சான்று வழங்க ஏற்பாடு செய்ய ரூபாய் 20,000/- தனக்கு தரவேண்டும் என்று கேட்டார். என்னால் அவ்வளவு தொகை தர முடியாது என்று சொன்னேன். அப்போது அவர் அந்த ரூ.20,000/- ல் ரூ.5000/- குறைத்துக்கொண்டு ரூ.15,000/- தனக்கு கொடுத்தால் தான் விதவை சான்றும், வாரிசு சான்றும் கொடுக்கமுடியும் என்று சொன்னார். நான் அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். மீண்டும் 4.6.2018 ஆம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு நான் ஊத்தங்கரை தாலுக்கா ஆபிஸ் சென்று, துணை

வட்டாட்சியர் சாம்ராஜ் அவர்களை பார்த்து என்னுடைய அம்மா அமராவதியின் விதவை சான்று மற்றும் எங்களுடைய வாரிசு சான்றுக்கான விண்ணப்பம் பற்றி கேட்டபோது, அவர் ஏற்கனவே தான் கேட்ட பணம் ரூபாய் 15,000/- கொடுத்தால் தான் எங்களுடைய விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுத்து விதவை சான்று மற்றும் எங்களுடைய வாரிசு சான்று வழங்க ஏற்பாடு செய்யமுடியும் என்று உறுதியாக சொல்லிவிட்டார். அவருக்கு ரூபாய் 15,000/- லஞ்சமாக கொடுத்து என்னுடைய வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, அவர்மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-xxxxxxxx (சேகர்) 05.06.2018. ஐயா, மேற்படி எழுத்துமூலமான புகாரை 05.06.2018-ம் தேதி மதியம் 15.00 மணிக்கு பெற்று முதற்கட்ட விசாரணை கோரி சென்னை ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநருக்கு மின்அஞ்சலில் அனுப்பினேன். Sd/-xxxxxxxxx (S.முருகன்) Inspr., V& AC, Kgi, 05/06/2018. ஐயா, 05.06.2018ம் தேதியிட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக நமூனா எண் P.E.167/2018/REV//KG-ன் படி 05.06.2018ம் தேதி 16.00 மணிக்கு முதற்கட்ட விசாரணை பதிவுசெய்யப்பட்டது. Sd/-xxxxxxxxx (S.முருகன்) Inspr., V& AC, Kgi, 05/06/2018. ஐயா, முதற்கட்ட விசாரணையில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் துணை வட்டாட்சியர் திரு.சாம்ராஜ் என்பவர், புகார்தாரரிடமிருந்து லஞ்சமாக பணம் கேட்டு வாங்க வேண்டும் என்ற குற்ற நோக்குடன் அவருடைய தயாரின் மனுமீது நடவடிக்கை எடுக்கவும், விதவை சான்று மற்றும் வாரிசு சான்று வழங்க ஏற்பாடு செய்யவும் ரூ.20,000/-ம் லஞ்சமாக கேட்டதாகவும், பின்னர், புகார்தாரர் கேட்டுக்கொண்டதன்பேரில் மேற்படி தொகையில் ரூபாய் 5,000/- குறைத்துக்கொண்டு ரூபாய் 15,000/- லஞ்சமாக கேட்டதாகவும் தெரியவருகிறது. எனவே கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் துணை வட்டாட்சியர் திரு.சாம்ராஜ் மீது குற்றவழக்கு தொடர போதுமான முகாந்திரம் இருப்பதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்ததால், அவர்மீது கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 4/AC/2018 u/s 7 of Prevention of Corruption Act, 1988-படி 05.06.2018-ம்

தேதி மாலை 20.00 மணிக்கு முதல் தகவலறிக்கை பதிவு செய்தேன். Sd/-xxxxxxxxx (S.முருகன்) Inspr., V& AC, Kgi, 05/06/2018. முதல் தகவலறிக்கையின் அசலையும், புகாரையும் கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

05/06/18
Inspr.
V&AC, Kgi